## கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிரியல்ரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம் - 2013

---

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிரியல்ரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கமளித்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 2003 இன் 01 ஆம் இலக்க உயிரியல்ரசாயண, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் கட்டளைகளின் 17 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(I) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படுதல் வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காட்டப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று 2014 மே 19 ஆந் திகதி நிறுவகத்தின் பணிப்பாளரிற்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) பின்தொடர்ந்து இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும்

நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து உயிரியல்ரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில்

முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

முகாமைத்துவச் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் பாடநெறிக் கட்டணங்களிலிருந்து நிறுவகத்தின் அபிவிருத்தி நிதியத்திற்கு உரியவாறு ரூபா 618,288 தொகை மாற்றீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கு மேலதிகமாக பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய தொகையாக மீண்டும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நிதி நிலைமைக் கூற்றிலுள்ள நடைமுறைச் சொத்துக்களும் நடைமுறைப் பொறுப்புக்களும் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) நிதிப்பிரமாணங்கள் 756, 757 மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆணைக்குழுவின் தாபன விதிக் கோவையின் XXVI ஆம் அத்தியாயத்தின் 2.12 ஆம் பிரிவு | வருடாந்தம் இருப்பு மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் இரசாயன இருப்புக்கள் மெய்மையாய்வு செய்யப் பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிறுவனத்தினால் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/நூலக/1 ஆம் இலக்க தேசிய நூலகங்கள் மற்றும் சுவடிக்கூடச் சேவைகள் சபையின் அறிவுறுத்தல் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் 3.1 ஆம் பிரிவு | நூலகப் புத்தகங்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், நூலகம் ஆரம்பிக்கப்பட்ட தினத்திலிருந்து கணக்காய்வுத் திகதியான 2014 மே 06 ஆந் திகதி வரை புத்தகங்கள் தொடர்பில் மெய்மையாய்வு இடம்பெற்றிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஈ) 2010 திசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கை | அரசாங்க நிறுவனங்களுக்காக வாடகை அடிப்படையின் கீழ் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக காணப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கையில் மீளாய்வாண்டில் வாடகை வாகனமொன்றிற்காக ரூபா 667,364 செலுத்தப்பட்டிருந்தது. |
| (உ) உயிரியல்ரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2003 இன் 01 ஆம் இலக்க விதிப்புக்களின் (ஈ) ஆம் பிரிவு | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், 04 பாடநெறிகளுக்காக அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் மீண்டெழும் மற்றும் புனரமைத்தல் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 39,994,576 பற்றாக் குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 33,944,254 ஆகும். மீண்டெழும் செலவினம் மற்றும் புனரமைப்பிற்கான ரூபா 47,818,000 அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுத்த பின்னர் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா. 7,823,424 மிகையொன்றாகியிருந்ததுடன் முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினங்களுக்கான ரூபா 37,568,028 அரசாங்க மானியம் காரணமாக அவ்வாண்டில் ரூபா 3,623,774 மிகை ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசாங்க மானியம் ரூபா 10,249,972 ஆலும் ஆய்வு மானியம் ரூபா 2,445,934 ஆலும் ஈட்டப்பட்ட வருமானம் ரூபா 8,518,872 ஆலும் அதிகரித்திருந்தமையே மீளாய்வாண்டின் ரூபா 4,199,650 வளர்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்ததுடன் அதற்கெதிராக மீண்டெழும் செலவினம் ரூபா 16,903,258 ஆல் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

மீளாய்வாண்டில் நிறுவகத்தினால் தத்துவவியல் முதுமாணி, தத்துவவியல் கலாநிதி மற்றும் விஞ்ஞான முதுமாணி என்ற 05 பட்டப் பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன. உயிரியல் விஞ்ஞான முதுமாணி மற்றும் தத்துவவியல்/கலாநிதி பட்டப்பின்

பாடநெறிகளுக்காக மாணவர்கள் பதிவுசெய்யப்படல் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் முறையே 50 மற்றும் 36 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

நிறுவகம் நடாத்திச்செல்லப்படும் கட்டிடம் அமைந்துள்ள கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு உரித்தான காணியினை கையேற்பதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்படாதுள்ள வங்கிக் கணக்குகள்

நிறுவகத்தினால் பேணப்பட்டு வருகின்ற இரண்டு வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 245,796 மீதியொன்று மிக நீண்டகாலமாக பயன்பாடற்றுக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 வரைபு ஆண்டறிக்கை

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் படி வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வரைபு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) நூலக நிர்வாகம்

(இ) இருப்புக் கட்டுப்பாடு